FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 2nd Term Examination - 2021

| | | | | |
|---|---|---|---|---|
| **கிறிஸ்தவ நாகரிகம்**<br>**Christian Civilization** | **Three Hours**<br>**Gr -12 (2022)** | **49** | **T** | **I,II** |

### பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. யூதர்களின் கலாசார விழாவான அறுவடையின் விழா திருச்சபையின் பிறந்த தினமாக புதிய வடிவெடுத்தது. இங்கு அறுவடையின் விழாவாக கருதப்பட்டது.
   1) பாஸ்கா விழா   2) கூடாரவிழா   3) பெத்தக்கோஸ்தே விழா
   4) பாவப் பரிகார விழா   5) கோவில் அர்ப்பண விழா

02. கிறிஸ்தவ நாகரிகத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்கள்
   1) பாரசீக நாகரிகம், அசீரிய நாகரிகம், உரோமைய நாகரிகம்
   2) கிரேக்க நாகரிகம், உரோமைய நாகரிகம், யூத நாகரிகம்
   3) உரோமைய நாகரிகம், சுமேரிய நாகரிகம், எகிப்திய நாகரிகம்
   4) எகிப்திய நாகரிகம், பாரசீக நாகரிகம், கிரேக்க நாகரிகம்
   5) சுமேரிய நாகரிகம், அசீரிய நாகரிகம், பாரசீக நாகரிகம்

03. முதன்முதலில் நாணயங்களை பயன்படுத்திய நாகரிகம்
   1) எகிப்திய நாகரிகம்   2) உரோமைய நாகரிகம்   3) மொசப்பத்தேமிய நாகரிகம்
   4) கிரேக்க நாகரிகம்   5) அசீரிய நாகரிகம்

04. முதன்முதலில் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட மூன்று பழைய ஏற்பாட்டு நூல்கள்
   1) சாலேமோனின் ஞானம், 1 மக்கபேயர், 2 மக்கபேயர்
   2) ரூத், யோபு, சபை உரையாளர்
   3) 1 குறிப்பேடு, 2 குறிப்பேடு, யோபு
   4) 1 மக்கபேயர், 2 மக்கபேயர், சபை உரையாளர்
   5) 1 குறிப்பேடு, 2 குறிப்பேடு, மீக்கர்

05. பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்கள் புரிந்து முடிவுகளை எடுக்கும் முறையை முன்வைத்தவர்கள்.
   1) உரோமையர்   2) அசீரியர்   3) யூதர்கள்
   4) அமலேக்கியர்   5) கிரேக்கர்

06. எஸ்திரலோன் சமவெளியில் காணப்படும் மலைத்தொகுதிகள் எவை?
   1) கார்மேல்மலை, தபோர் மலை, ஏபல்மலை
   2) வெபனான் மலை, கார்மேல்மலை, எர்மோன்மலை
   3) தபோர் மலை, ஏபல்மலை, அர்மோன் மலை
   4) யூதேயாமலை, பாசான்மலை, தபோர்மலை
   5) ஏபல்மலை, நேபோமலை, ஒலிவமலை

07. பபிலோனியாவில் அடிமையாயிருந்த யூதர்களை தம் சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்வர் என நம்பிக்கையூட்டிய இறைவாக்கினர் யார்?

1) எசாயா 2) எரேமியா 3) எசேக்கியேல் 4) ஆமோஸ் 5) மீக்கா

08. மீட்பு வரலாற்றின் மையமாக திகழும் நகர்?

1) எருசலேம் 2) பெத்தானியா 3) எரிக்கோ
4) பெத்தலகேம் 5) நாசரேத்

09. மொழி பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக

A – கற்றோரின் மொழியாக அழைக்கப்பட்டது

B – பல ஐரோப்பிய மொழிகளுக்கு தாய்மொழியாக விளங்கியது

C – இந்தோ ஐரோப்பிய மொழிகளில் ஒன்றாகும்.

D – உரோமன் கத்தோலிக்க தலைமைப்பீடத்தின் நிர்வாக மொழியாக காணப்படுகிறது.

E – உரோமைய பைசாந்திய பேரரசுகளில் இம்மொழி சிறப்புற்று விளங்கியது.

இவற்றுள் கிரேக்க மொழி பற்றிய சரியான கூற்றுக்கள்

1) ADE 2) BCD 3) ABC 4) ACE 3) BDE

10. தாவீது அரசன் கால ஆட்சியோடு தொடர்புடைய கூற்றுக்களாக அமைவன.

A – உடன்படிக்கை பேழை எருசலேம் நகருக்கு கொண்டு வரப்பட்டமை

B – மக்கள் மீது அதிக வரிச்சுமை சுமத்தப்பட்டது.

C – வழிபாட்டில் திருஇசை பயன்படுத்தப்பட்டமை

D – எருசலேம் ஆலயத்தில் பலி செலுத்த குருக்கள் நியமிக்கப்பட்டமை

E – செங்கடலோரத்தில் துறைமுகம் கட்டியமை

1) ABC 2) ACD 3) BCD 4) ADE 3) CDE

11. இயேசுவின் காலத்தில் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்பட்டவர்களைக் கொண்ட தொகுதி

1) ஏழைகள், அரச குடும்பத்தினர், தலைமைக்குரக்கள்
2) சிறு வியாபாரிகள், அடிமைகள், பெண்கள்
3) கட்டக் கலைஞர்கள் பெண்கள், சமாரியர்
4) ஏழைகள், அடிமைகள், பெண்கள்
5) பரிசேயர், செல்வந்தர்கள், வரிதண்டுவொர்

12. சமாரியர்கள் தமக்கென ஆலயம் அமைத்திருந்த இடம்

1) தபோர் 2) ஏப்ரோன் 3) கார்மேல் 4) கெரிசிம் 5) திபேரியா

13. பராசீக மன்னனால் யூத நாட்டிற்கு ஆளநராக நியமிக்கப்பட்டவர்

1) எஸ்ரா 2) நெகேமியா 3) பிலாதது 4) கோட்டோனிய 5) ரூத்

14. யூதர்கள் பாஸ்கா திருவிழாவை கொண்டாடிய காலம் யாது?

1) மார்ச் - ஏப்ரல் 2) நவம்பர் - டிசம்பர் 3) ஏப்ரல் - மே
4) செப்ரெம்பர் - ஒக்ரோபர் 5) ஆகஸ்ட் - செப்ரெம்பர்

15. எருசலேம் ஆலய கல்மேடையில் வைக்கப்பட்டிருந்த பொருள்

1) ஏட்டுச்சுருள் 2) உடன்படிக்கை பேழை 3) தங்கத் தகடு

4) காணிக்கைப் பெட்டி 5) பலிப்பொருள்

16. எபிரேய மொழியில் "ஹனுக்கா" என அழைக்கப்படும் விழா

1) புளியாத அப்பத் திருவிழா 2) கூடாரத்திருவிழா

3) பெந்தக்கோஸ்தே திருவிழா 4) ஆலய அர்ப்பண விழா

5) பாஸ்காத் திருவிழா

17. இறையாட்சியின் தன்மைகளை விளக்குவதற்கு இயேசு பயன்படுத்திய உவமைகளில் பொருத்தமற்றது.

1) புளிப்பு மாவு 2) விதைப்பவன் 3) புதையல் 4) நல்ல சமாரியன் 5) வலை

18. யூதர்களின் அன்றாட செபமான "சேமா" குறித்து நிற்பது

1) ஓய்வு 2) புகழுரை 3) கடவுளுக்கு செவிகொடு

4) இறையன்பு 5) இறைவனை புகழ்

19. இஸ்ரயேல் வரலாற்றில் சாதோக் தலைமைக் குரவாக நியமிக்கப்பட்டது?

1) ஆரொன் காலத்தில் 2) தாவீதின் காலத்தில் 3) சாலமோனின் காலத்தில்

4) சவுலின் காலத்தில் 5) சாமுவேலின் காலத்தில்

20. மசொத் என்பதன் பொருள்

1) முதற்கனி 2) ஒப்பிடுதல் 3) புளியாத

4) ஆற்றைக் கடந்தவர்கள் 5) கர்த்தருக்குச் செவிகொடு

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பகுதி (அ) இல் இரண்டு வினாக்களையும் பகுதி (ஆ) இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

### பகுதி "அ"

*01.* 1) நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலுள்ள வேற்றுகளை 4 தருக. (2 புள்ளிகள்)
2) இஸ்ரயேலின் நீதித்தலைவர்களுக்கு இறைவனால் ஒப்படைக்கப்பட்ட முக்கியமான பணிகளை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3) தாவீது மன்னனின் ஆட்சியில் நாட்டில் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக? (6 புள்ளிகள்)
4) யூத சமய – சமூக கலாசார மறுமலர்ச்சிக்கு எஸ்ரா, நெகேமியா ஆற்றிய பங்களிப்பை விளக்குக. (8 புள்ளிகள்)

*02.* 1) பலஸ்தீனாவின் குறுநில மன்னன் பெரிய ஏரோதுவின் (கி.மு. 7 – கி.மு. 4) மூன்று மகன்களுடைய பெயர்களைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)
2) பலஸ்தீனாவின் மேற்கு நிலப் பகுதியின் கலிலேயாவின் சிறப்புக்கள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3) பலஸ்தீனாவை பாரசீகர் ஆட்சி செய்தபோது நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளை விபரிக்க? (6 புள்ளிகள்)
4) பலஸ்தீனாவில் கிரேக்கர் ஆட்சி புரிந்தபோது கிரேக்க கலாச்சாரம் செல்வாக்கு செலுத்தியதை விளக்குக? (8 புள்ளிகள்)

*03.* 1) இயேசுவின் கால யூத சமூக மரபுகளை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2) எருசலேம் ஆலயத்தின் முக்கியத்துவங்கள் எவை? (4 புள்ளிகள்)
3) இயேசு இறையாட்சியின் அடையாளமாக புதுமைகளை பயன்படுத்தியதற்கான காரணங்களை விளக்குக. (6 புள்ளிகள்)
4) யூதர்களின் தலைமைச் சங்கத்தின் விதிமுறைகள் பற்றி மிஸ்னா எனும் நூலில் குறிப்பிடப் பட்டவை பற்றி விளக்குக. (8 புள்ளிகள்)

### பகுதி "ஆ"

*04.* அ) இயேசுவின் மலைப்பொழிவு அறிவுரையில் வரும் விடயங்கள் ஐந்தை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விபரிக்குக. (10 புள்ளிகள்)
ஆ) மலைப்பொழிவின் பேறுகளில் காணப்படும் சவால்மிக்க விடயங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

*05.* அ) கி.பி முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீன சமூகத்தினால் புறந்தள்ளி வைக்கப்பட்டவர்களான பாவிகள், வரிதண்வோர், சமாரியர் மட்டில் இயேசுவின் மனநிலையை விளக்குக. (10 புள்ளிகள்)
ஆ) இயேசுவின் காலத்து சமூகத்தைப்போல இன்று நாம் வாழும் சமூகத்தில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் மத்தியில் எவ்வாறு செயற்படுவீர் என விளக்குக. (10 புள்ளிகள்)

*06.* அ) இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயண நிகழ்வை விளக்குக. (10 புள்ளிகள்)
ஆ) எமது சமுதாயத்தில் இறைநம்பிக்கையை கட்டியெழுப்ப இஸ்ரயேல் மக்களின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகள் விளக்குக. (10 புள்ளிகள்)

*07.* அ) இறையாட்சியை மையப்படுத்திய இயேசுவின் புதிய சமூக பார்வையை விளக்குக. (10 புள்ளிகள்)
ஆ) இன்று உலகில் காணப்படும் பல்வேறு முரண்பாடுகளுக்குமிடையில் ஒரு புதிய சமூகத்தை உருவாக்க இயேசுவின் படிப்பினைகளை பின்பற்றி ஆற்றக்கூடிய செயற்பாடுகளைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)